எவ்வளவு சேதம், எப்படி உதவிகள் செய்ய வேண்டுமென்ற முறைகளை வகுப்பதற்கு முன்பு உடனடியாக, முதல் கட்டமாக உதவிகளைச் செய்வ வதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்படு கிறது, அளிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்து இதுபற்றி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை யென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

(3) அமைச்சரின் அறிக்கை.

கேரள மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் இடையே நதி நீர்ப் பிரச்னைகள் குறித்து நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் குறித்து பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நமது மின் துறை அமைச்சர் மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்களும், நானும் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும், திருவனந்தபுரத்தில், கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் இருந்து வந்த நதி நீர் பிரச்சனைகள் குறித்து 8—3—1974 தேதி அன்று நடத்திய பேச்சு வார்த்தைகளின் முழு விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன். கேரள மாநிலத்தின் சார்பில், அம்மாநிலத்து முதல்வர் அவர்களும், பொதுப்பணித் துறை, மின் துறை அமைச்சர்களும், தங்கள் தலைமைச் செயலாளர் இதர அதி காரிகளோடும் கலந்து கொண்டார்.

(1) பாண்டியார் புன்னபுழா திட்டம் :—

1965-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் தமிழ்நாடு அரசிற்கும் கேரள அரசிற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி மேற்கு முகமாய் ஓடும் பாண்டியார் புன்னபுழா ஆறுகளில் அணைகள் அமைத்து 14 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீரைக் கொண்டு 442 மில்லியன் யூனிட் மின் சக்தி உற்பத்தி செய்து, தண்ணீரை முறையாக கேரளாவுக்கு விட்டு விடுவதென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த தண்ணீரைப் பயன்படுத்தி இரு அரசுகளும் இணைந்து சோழாட்டிபுழாவில் மின்சக்தி உற்பத்தி செய்து சமமாக பங்கு கொள்வதற்கும் 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

பாண்டியாறு புன்னபுழா தண்ணீரை மோயாற்றுக்குள் திருப்பி பவானி வடிகால் பகுதிக்கு வரும்படி செய்தால் கோவை மாவட்டத்தில் வறண்ட பகுதிகளுக்கு பாசன வசதி வழங்கலாமென்று, கோவை மாவட்ட விவசாயிகள் அரசுக்கும் மதிப்பீட்டு குழுவிற்கும் முறையீடு செய்திருந் தனர். மதிப்பீட்டுக் குழு அதன்பேரில் பாண்டியாறு புன்னபுழா தண் ணீரை கீழ்ப் பக்கமாக திருப்புவது குறித்து அரசு கவனிக்குமாறு பரிந்

துரை செய்தது. பரிசீலனை செய்து பார்த்ததில் பாண்டியாறு மோயாறு திட்டம் சாத்தியமானதென்று தெரிந்தது. இத் திட்டத்தால் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட அதே அளவு மின் சக்தி உற்பத்தி செய்வதோடு, ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி பெற வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்ததால், இத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குமாறு கேரள அரசை கேட்கப்பட்டது. இரு அரசுக்குமிடையே பலமுறை பேச்சு வார்த்தைகள் இது குறித்து நடைபெற்றன. 1965-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்திலிருந்து எவ்வித மாறுதலும் செய்ய கேரள அரசு விரும்பவில்லை. தமிழ் நாடு நீர்கோள் பகுதியில் 25,000 மில்லியன் கன அடி தண்ணீர் கிடைப்பதில் 14,000 மில்லியன் கன அடி தண்ணீரைத்தான் கிழக்கு புறமாக திருப்ப தமிழ் நாடு கோருகிறது என்று விளக்கப்பட்டது. ஆயினும் தங்களுக்கு தற்போதுள்ள நிலைகளுக்கு முறையாக தண்ணீர் தேவைப்படுகிறதென்று கேரளா கூறியதன் பேரில் 9,000 மில்லியன் கன அடி தண்ணீரை மாத்திரம் கிழ்ப்பக்கமாக தமிழ் நாட்டிற்கு திருப்பிவிட்டு மீதமுள்ள 5,000 மில்லியன் கன அடி தண்ணீரை கேரளாவுக்கு விட்டு விடுகிறோமென்று தெரிவித்தோம். மேலும் கேரள மாநிலத்திற்கு ஏற்படும் 9,000 மில்லியன் கன அடி தண்ணீர் இழப்பை ஈடு செய்ய இதன் தொடர்பாக கேரள மாநிலத்தில் கட்டப்படவேண்டிய மூன்று அணைகளையும் தமிழக அரசு, நம் செலவிலேயே கட்டித் தருகிறோமென்று தெரிவித்தோம். அதற்கும் கேரள அரசு மறுத்துவிட்டது. இதற்கு அவர்கள் சொன்ன காரணம், தங்களுக்கு மின் சக்தி உற்பத்தி குறையும் என்பதாகும். அதற்காக, பாண்டியாறு—புன்னபுழா திட்டத்திற்கு கீழ் கட்டப்பட வேண்டிய சோழாட்டிபுழா திட்டத்தில் தமிழக அரசிற்கு இருக்கும் 50 சதவிகிதம் மின் சக்தி உரிமையை விட்டுக் கொடுக்கிறோம் என்றும் தெரிவித்தோம். இதற்கும் மேலாக ஒரு படி மேலே சென்று மற்றொரு கருத்தும் தெரிவித்தோம். அதாவது பாண்டியாறு புன்னபுழா ஆறுகளிலிருந்து, கோவை மாவட்டத்தின் பாசனத்திற்கு கேரளா நீர் வழங்க ஒப்புக் கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் நெல் கேரளாவுக்கு வழங்குகிறோம் என்றும் தெரிவித்தோம். ஆயினும் நாம் எடுத்து உரைத்த எல்லா மாற்று யோசனைகளையும் கேரள அரசு ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, 1965-ம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தைத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்தியது. இதற்கு மேலும் காலந் தாழ்த்துவதால் பலன் கிடைக்குமென்று நம்பிக்கை இழந்துவிட்டது மட்டுமல்ல, பாண்டியாறு புன்னபுழா வேலைகளுக்கான செலவுத் தொகை மேலும் கூடுதலாகும்.

இதன்றி, கீழ் நீராறு அணை சம்பந்தமாக கேரள மாநிலத்தின் அனுமதியை நாம் பெற வேண்டி இருந்தது. இதற்கிடையில் இந்திய பிரதமர் நம் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் பாண்டியாறு—மோயாறு திட்டத்தால் முதுமலை வனவிலங்கு சரணலயத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்படுமென்றும் வனவிலங்குகள் உய்விடத்திற்கு குந்தகம் விளையாது, மாற்று ஏற்பாடுகள் செய்யுமாறும் தெரிவித்தார்கள்.

இவைகளின் காரணமாக வேறு வழியின்றி, கேரள அரசின் வற்புறுத்தலான 1965-ம் ஆண்டு ஒப்பந்தப் படியே பாண்டியாறு புன்னபுழா திட்டத்தை செயல்படுத்தலாம் என்ற இசைவு மன வருத்தத்தோடு நம் தரப்பில் தரப்பட்டது.

(2) கீழ் நீராறு அணை.

1970-ம் ஆண்டு மே திங்கள் 29-ம் நாள் கையெழுத்திட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஒப்பந்தப்படி கீழ் நீராறு நீர்க்கோள் பகுதியில் கட்டவிருக்கும் நீர்த்தேக்க அணைக்கட்டுமிடத்திற்கும், தண்ணீரை கொண்டு வர அமைக்கவிருக்கும் சுரங்க பாதைக்கான இடத்திற்கும் நாம் கேரள அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும். அணைக்கட்டுவதற்கு சாத்தியக் கூறாக உள்ள ஒரே ஒரு இடத்திற்கான ஒப்புதலை கேரள அரசிடம் நாம் கேட்டோம். ஆனால் தண்ணீர் வழங்குவதில் கூட்டு மேற்பார்வை உரிமை போன்ற சில பிரச்சனைகளை கேரளா எழுப்பிற்று. திட்டத்தை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படின் அதன் விளைவாக செலவினம் அதிகரிக்குமென்றும், தண்ணீர்த் தேவைப்படுகிற பின்தங்கிய பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படும் என்றும் கேரள அரசிற்கு விளக்கி சொல்லப்பட்டது. பாண்டியாறு—புன்னபுழா ஒப்பந்தத்தை ஒட்டி கேரள அரசு கீழ் நீராறு அணை சுரங்கப்பாதை இவை அமைக்கும் இடங்களுக்கு தற்போது ஒத்துக்கொண்டது. இதனால் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் 2,000 மில்லியன் கன அடி தண்ணீர் கூடுதலாகப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைக் கொண்டு கூடுதலாக மின்சார உற்பத்தியும் பாசன வசதியையும் நம்மால் பெருக்கிக்கொள்ள முடியும்.

(3) ஆனமலையாறுத் திட்டம்.

கேரள அரசு நமக்கு ஆய்வின் முழு விவரங்களையும் அறிவிக்கவேண்டும். மேலும் அவர்கள் ஆய்விற்காக உபயோகப்படுத்தும் நம் எல்லையிலுள்ள நிலங்களுக்கு வாடகை தரவேண்டும் என்பன போன்ற நிபந்தனைக் குட்பட்டு, கேரள அரசு ஆனைமலையாறுத் திட்டத்தின் ஆய்விற்கான பணிகளை நம் எல்லையிலும் மேற்கொள்ளலாம் என்று நம் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலமாக நீண்ட நாளாகத் தேங்கிக் கிடந்த திட்டங்களை செயல்படுத்தவும் அதன் பயனாக, நம் மாநிலத்தில் தண்ணீர் வசதியையும் மின்சக்தி உற்பத்தியையும் ஓரளவிற்கு பெருக்க ஏதுவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டமன்றப் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS